Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, APRIL 10, 2025

வெள்ளிக்கிழமை 11, ஏப்ரல் 2025 | ஒளி: 10 கதிர்: 199 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## செவ்வாய் விடுமுறை இல்லை

எதிர்வரும் 15ஆம் திகதி அரச விடுமுறை தினம் என இதுவரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை, எனவே, இவ்வாறான போலி தகவல்கள் குறித்து மிகவும் கவனமாக இருக்குமாறு அரசாங்க தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.







## அமெரிக்காவின் புதிய வரிக்கொள்கை:

# தொடர்ந்து ஆராய முடிவு

அமெரிக்க புதிய வரிக் கொள்கையைப் பற்றி ஆராய ஜனாதிபதியால் கூட்டப்பட்ட கட்சித் தலைவர்கள் கூட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு முன்வைத்துள்ள முன்மொழிவுகள் என்பவற்றை ஒன்றிணைத்து கட்சித் தலைவர்களுடன் தொடர்ந்து ஆராயவும் இதன் போது முடிவு செய்யப்பட்டது.

அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கை இலங்கைக்கு எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பது தொடர்பாகவும் அது தொடர்பில் அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான பரிந்துரைகள் குறித்தும் ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கட்சித் தலைவர்கள் கூட்டம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில், வியாழக்கிழமை (10) நடைபெற்றது.

ஜனாதிபதியைச் சந்தித்து இந்த விவகாரம் குறித்து ஆராய்வதற்கு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து, ஜனாதிபதி இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கைக்கு ஏற்ப எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு முன்வைத்த விடயங்கள் குறித்து ஜனாதிபதி கட்சித் தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பான விடயங்கள் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும்

தொடர்ச்சி P2

## 35 வேட்பு மனுக்களை ஏற்க உத்தரவு

எதிர்வரும் மே.6ஆம் திகதியன்று நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்டு, முன்னர் நிராகரிக்கப்பட்ட 35 வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், வியாழக்கிழமை (10) உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## "இறுதி யுத்த குற்றங்களை தடுத்திருக்கலாம்"



பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பான ஆணைக்குழு அறிக்கை வெளிவந்த உடனேயே சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாக இருந்தால், இறுதிக் கட்ட யுத்தத்தின் போது நடந்த பல குற்றச் செயல்கள் தடுக்கப்பட்டிருக்கும் என்று இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## 80க்கும் அதிகமான விதப்புரைகள் கிடப்பில்

பாராளுமன்றக் குழுக்களினால் வழங்கப்பட்டு இது வரை நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு மாதகால அவகாசம் வழங்குவதற்கு, பாராளுமன்றக் குழுக்களின் விதப்புரைகள், சம்பந்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களினால் அவை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் மதிப்பாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

தமிழ்Mirror FREE E-PAPER

## தமிழ்மிரர் மின்னிதழ் வெளிவராது

திங்கள் முதல் வெள்ளி வரை வெளியிடப்படும் தமிழ்மிரர் மின்னிதழ், 2025 தமிழ்-சிங்கள புத்தாண்டையொட்டி, ஏப்ரல் 14,15 மற்றும் 16ஆம் திகதிகளில் வெளிவராது. வழமை போல, ஏப்ரல் 17ஆம் திகதி முதல் வெளியாகும் என்பதை எமது வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். எமது வாசகர்களுக்கு இனிய தமிழ்-சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதிலும் மகிழ்ச்சியடைகிறோம்.



## 35 ஆயிரம் பொலிஸார் உஷார்

தமிழ்- சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் 35 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இசை நிகழ்ச்சிகள், திருவிழாக்கள் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் கூடும் மத வழிபாட்டுத் தலங்களுக்கு வருகை தரும் மக்களுக்கு இந்த சிறப்பு பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

தொடர்ச்சி P2



### ஜே.ஆர்-பிரேமதாச ஆட்சியில்

## 14 வயதுக்கு கீழ் 44 பேர் படுகொலை

ஜே.ஆர்.ஜெயவர்தன மற்றும் பிரேமதாசவின் கொடூரமான ஆட்சியில் 14 வயதுக்குட்பட்ட 44 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த விடயத்தை ஒட்டுமொத்தமாகப் பரிசீலிக்க வேண்டும். ஜே.ஆர்., பிரேமதாசா மற்றும் ரணிலின் கொடூரமான ஆட்சி நம் நாட்டில் ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்றது.

இன்று, நாம் அந்த சித்திரவதைக் கூடங்களில் ஒன்றைப் பற்றி மட்டுமே பேசுகிறோம். இன்று, இங்குள்ள வர்களில் பலர் அந்தக் கொடூரமான ஆட்சியை நியாயப்படுத்துகிறார்கள்.

தொடர்ச்சி P2



### 34 வருடங்களின் பின்னர்

## பலாலி- பருத்தித்துறையில் 21/2 கிலோ மீற்றர் திறப்பு

யுத்தம் காரணமாக உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பலாலியில் இருந்து பருத்தித்துறை சந்தி வரையிலான வீதி 34 ஆண்டுகளுக்குப் பிறகு வியாழக்கிழமை (10) அன்று பொதுமக்களுக்குத் திறக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம்-பலாலி பிரதான வீதியில் உள்ள வாசவிளான் சந்திப்பிலிருந்து பருத்தித்துறை பொன்னாலை சந்திப்பு வரையிலான இரண்டரை கிலோ மீற்றர் நீளமான வீதியே இவ்வாறு திறக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பட்டலந்த ஹிட்லர்



பட்டலந்த சித்திரவதை முகாம் பற்றிய ஆணைக்குழு அறிக்கையில் இலங்கையின் ஹிட்லர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இளைஞர்களின் இரத்தம் மற்றும் உடலை ரணில் விக்ரமசிங்க நிலத்துக்கு உரமாக்கினார். இந்த சித்திரவதை முகாமை போன்று நாடு முழுவதும் அரச ஆதரவுடன் பல சித்திரவதை முகாம்கள் காணப்பட்டன என பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (10) அன்று இடம்பெற்ற பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின்

தொடர்ச்சி P2

## தென்னகோனுக்கு பிணை



கட்டாய விடுமுறையில் இருக்கும் பொலிஸ் மா அதிபர் (ஐ.ஜி.பி) தேசபந்து தென்னகோனுக்கு மாத்தறை நீதவான் நீதிமன்றம், வியாழக்கிழமை (10) பிணை வழங்கியது.

தலா 1 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளுடன் மாத்தறை பிரதான நீதவான் அருண இந்திரஜித் புத்ததாசவினால் பிணை வழங்கப்பட்டது.

வெலிகம, பெலேனா பகுதியில் உள்ள ஹோட்டலுக்கு முன்பாக 2023 டிசெம்பர் 31 அன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக தென்னகோன் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

## கழிப்பறைக்கு முன் பிரசவித்த தாயும் சேயும் மரணம்

குழந்தை பிறப்பதற்கு ஆறு நாட்களுக்கு முன்பு, அந்த சிசுவைப் பிரசவித்த தாயும் அவரது குழந்தையும், வீட்டின் கழிப்பறைக்கு முன்னால் சந்தேகத்திற்கிடமான முறையில் இறந்து கிடந்துள்ளனர் என மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கழிப்பறைக்கு முன் பிரசவித்த தாயும் சேயும் மரணம்

உயிரிழந்தவர், கொழும்பு-10, மாளிகாவத்தையில் வசிக்கும் இரண்டு குழந்தைகளின் தாயார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இறந்த பெண் வீட்டின் கழிப்பறைக்கு முன்னால் தரையில் முகம் குப்புறக் கிடந்ததாக கணவர் அளித்த வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவளுடைய மைத்துனரிடமிருந்து செய்தி வந்ததும், அவர்கள் வீட்டிற்குச் சென்று வீட்டைப் சோதித்தனர், அவளுடைய உடலிலும் தரையிலும் அதிக அளவு இரத்தம் இருப்பதைக் கண்டுள்ளனர்.

இறந்த மனைவியின் வயிற்றில் இருந்த குழந்தை அந்த நேரத்தில் அவரது காலடியில் இருந்ததாகவும், குழந்தை தொப்புள் கொடியை வெட்டாமல் ஒரு துணியில் சுற்றப்பட்டிருந்ததாகவும், மனைவியும் குழந்தையும் முச்சக்கர வண்டியில் பொரளை பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களைப் பரிசோதித்த பிறகு, அங்குள்ள மருத்துவர்கள், இருவரும் இறந்துவிட்டதாக அறிவித்தனர். இந்த மரணங்கள் குறித்து விசாரணையைத் தொடங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பட்டலந்த ஹிட்லர்

அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

பட்டலந்த சித்திரவதை முகாமில் பல்கலைக்கழக மாணவர்கள், சட்டத்தரணிகள், தொழிற்சங்கவாதிகள் உட்பட பலர் படுகொலை செய்யப்பட்டனர். இது வெறும் அறிக்கையல்ல, இலங்கையின் ஹிட்லர் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் இடம்பெற்ற பயங்கரவாதத்தை அரச பயங்கரவாதம் என்றே அழைக்க வேண்டும்.

பட்டலந்த வீட்டுத்தொகுதிக்கும், ரணில் விக்ரமசிங்கவுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இளைஞர்களின் இரத்தம் மற்றும் உடலை ரணில் விக்ரமசிங்க நிலத்துக்கு உரமாக்கினார். இந்த சித்திரவதை முகாமை போன்று நாடு முழுவதும் அரச ஆதரவுடன் பல சித்திரவதை முகாம்கள் காணப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் சித்திரவதை முகாம்களுக்குத் தலைமை தாங்கினார்கள்.

அநீதியாகக் கொல்லப்பட்டவர்களுக்கு நிச்சயம் நீதியை நாங்கள் பெற்றுக்கொடுப்போம். பட்டலந்த விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முறையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். பட்டலந்த விவகாரத்தை மக்கள் விடுதலை முன்னணி மீது சுமத்த ரணில் விக்ரமசிங்க மேற்கொண்ட முயற்சிகள் அவருக்கே எதிராகத் திரும்பியுள்ளன

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியதை போன்று தான் அவரது மருமகனான ரணில் விக்ரமசிங்க அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார். அதன் பெறுபேறு பட்டலந்த சித்திரவதை முகாம்.

1988 மற்றும் 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களை எமது வைப்பிலிடுவதற்கு ரணில் விக்ரமசிங்க முயற்சிக்கிறார். உண்மை நிச்சயம் வெளிவரும் என்றார்.

## 35 வேட்பு மனுக்களை ஏற்க உத்தரவு

அதன்படி, வேட்புமனுக்களை ஏற்க சம்பந்தப்பட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம், உள்ளூராட்சித் தேர்தலுக்கான 37 வேட்பு மனுக்களை ஏற்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# தொடர்ந்து ஆராய முடிவு

கட்சிகளால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

அமெரிக்க அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கான பரிந்துரைகளைத் தயாரிப்பது மற்றும் ஏற்றுமதி இலக்குகளை பல்வகைப்படுத்துவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் எஸ்.ராசமாணிக்கம், புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக, தமிழ் முற்போக்கு கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன் மற்றும் பழனி திகாம்பரம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி ரிஷாத் பதியுதீன், சர்வஜன பலய கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜெயவீர, ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, சுயோட்சைக் குழு 17 சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.அர்ச்சுன ஆகியோர் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான கயந்த கருணாதிலக்க, காவிந்த ஜயவர்தன, எஸ்.எம். மரிக்கார், காதர் மஸ்தான் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலாலி–பருத்தித்துறையில் 21/2 கிலோ மீற்றர் திறப்பு

பலாலி இராணுவ முகாமில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தின் வழியாக இந்த வீதியை திறந்து வைத்திருப்பது மக்களின் நடமாட்டத்தைப் பெரிதும் எளிதாக்கும்.

இருப்பினும், மீண்டும் திறக்கப்பட்ட வீதியில் பயணிக்கும் பயணிகள் கடைப்பிடிக்க வேண்டிய ஏழு நிபந்தனைகளை இராணுவம் வெளியிட்டுள்ளது. குறித்த வீதி, காலை 6 மணி முதல் மாலை 5 வரை மாத்திரம் போக்குவரத்திற்காக திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வீதியில், மோட்டார் சைக்கிள், பேருந்துகள், முச்சக்கரவண்டி, வேன் மட்டுமே பயணிக்க முடியும் என்றும் வாகனங்கள் 40KM வேகத்தில் செலுத்த வேண்டும். இடையில் வாகனங்டகள் நிறுத்த தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

## 14 வயதுக்கு கீழ் 44 பேர் படுகொலை

இந்தச் சமூகம் ஏராளமான சித்திரவதைக் கூடங்களின் வரலாற்றைக் கொண்டுள்ளது, அங்கு ஒரு புதிய சமூகத்தைப் பற்றி சிந்தித்த இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். அந்த நேரத்தில், ஜே.வி.பி எடுத்த முடிவுகள் நியாயமானவை என்பதை ஆணைக்குழு அறிக்கை தெளிவாகக் கூறுகிறது என்றும் அமைச்சர் கூறினார்.



## 35 ஆயிரம் பொலிஸார் உஷார்

கொழும்பு நகரத்தை அடிப்படையாகக் கொண்டு, கொழும்பு கோட்டை, காலி முகத்திடல், பொரளை, கிருலப்பன, பம்பலப்பிட்டி ஆகிய பகுதிகளிலும், மதத் தலங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும் 6,000 பொலிஸ் அதிகாரிகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரம் மற்றும் கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் உள்ள வணிக வளாகங்களுக்கு ஏராளமான மக்கள் வருகை தந்து, திருடர்கள் மற்றும் கொள்ளையர்களிடமிருந்து தங்கள் பணத்தையும் சொத்துக்களையும் பாதுகாக்குமாறு பொதுமக்களை வலியுறுத்துவார்கள் என்று பொலிஸ் நம்புகின்றனர்.

இந்த பண்டிகை காலத்தில் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பிற பாதுகாப்பு பணியாளர்களுக்கு உதவி வழங்கப்பட வேண்டும் என்றும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## 80க்கும் அதிகமான...



இந்தக் குழு அதன் தலைவர் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் (சட்டத்தரணி) ஹர்ஷன நாயணக்கார தலைமையில் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய, குழுவினால் முன்னுரிமை வழங்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்படவேண்டிய, நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், இதன்போது பொது மனுக்கள் பற்றிய குழுவினால் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரில் வழங்கப்பட்ட 80க்கும் அதிகமான விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது புலப்பட்டது. அத்துடன், அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE), அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (COPA), அரசாங்க நிதி பற்றிய குழு (COPF) ஆகிய குழுக்களினால் வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்குவதற்கு குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு கடிதங்களை அனுப்புவதற்கும், ஒரு மாத காலத்துக்குள் நடைமுறைப்படுத்த முடியாது எனின் அதற்கான காரணங்களைக் குழுவுக்கு எழுத்து மூலமாகப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க மற்றும் ஒஷானி உமங்கா ஆகியோரும் பாராளுமன்ற அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## “இறுதி யுத்த குற்றங்களை தடுத்திருக்கலாம்”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(10) நடைபெற்ற பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பான ஆணைக்குழு அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

எமது நாட்டில் இடம்பெற்ற பாரதூரமான கொலைகள் தொடர்பான குற்றங்கள், நீதித்துறைக்கு விரோதமான கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவை போன்ற பல விடயங்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை 35 ஆண்டுகளுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் இப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதேபோன்ற பல அறிக்கைகள் வடக்கு, கிழக்கில் நிலவிய யுத்த காலத்தின் போதும், ஜே.வி. பியின் எழுச்சி காலத்தின் போதும்,



நடைபெற்ற மனித குலத்திற்கு எதிரான யுத்தக் குற்றங்கள் போன்ற பல விடயங்களைக் கொண்ட பல்வேறு அறிக்கைகள், பட்டலந்த அறிக்கையைப் போன்று பல வருடங்களாகக் களஞ்சியங்களில் ஆராயப்படாமல் இருக்கின்றன என்றார்.

# நிமேஷின் புதைக்குழிக்கு பொலிஸ் பாதுகாப்பு




வெலிக்கடை பொலிஸ் காவலில் இருந்தபோது இறந்ததாகக் கூறப்படும் பசறை, மீகஹகிவுலேவைச் சேர்ந்த 25 வயதுடைய நிமேஷ் சத்சார என்பவரின் உடல் அடக்கம் செய்யப்பட்ட மயானத்தில் புதன்கிழமை (09) இரவு முதல் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை (09) விசாரிக்கப்பட்ட வழக்கில், இறந்த சத்சர நிமேஷின் உடலைத் தோண்டி எடுத்து, மூன்று பேர் கொண்ட மருத்துவ நிபுணர் குழுவால் பிரேதப் பரிசோதனை நடத்தக் கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா உத்தரவிட்டிருந்தார்.

அதனடிப்படையில், இறந்தவரின் சடலம் புதைக்கப்பட்ட புதைகுழிக்குப் பாதுகாப்பு வழங்க பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளதாக கந்தகெட்டிய பொலிஸார்தெரிவித்தனர்.

பதுளை மீகஹகிவுலவைச் சேர்ந்த நிமேஷ் சத்சார என்ற இந்த இளைஞன் ஏப்ரல் 1ஆம் திகதி வெலிக்கடை பொலிஸ் காவலில் இருந்தபோது சித்திரவதையால் இறந்ததாகக் கூறி அவரது தாயார், செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வு பிரிவினர் (சி.ஐ.டி.) கோரியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



போலி ஆவணங்களுடன்

## ஸ்பா பெண் உட்பட மூவர் கைது

பொரலஸ்கமுவவில் உள்ள மசாஜ் நிலையமொன்றில் இருந்து கைது செய்யப்பட்ட பெண்ணின் வசம் இருந்த போலி அடையாள அட்டை தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின் போது, வெலிக்கடையில் உள்ள ஒரு ஆடம்பரமான நான்கு மாடி வீட்டின் உரிமையாளர், மற்றொரு நபருடன் இணைந்து நடத்தி வந்த போலி அடையாள அட்டைகள் உள்ளிட்ட ஆவணங்களைத் தயாரிப்பு தொடர்பாகத் தெரியவந்ததாக நுகேகொடை குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கணினி, ஒரு அச்சுப்பொறி, ஒரு லேமினேட்டிங் இயந்திரம், போலி தேசிய அடையாள அட்டைகள், போலி வருமான அனுமதிப் பத்திரங்கள், வெளிநாட்டு விசாக்களின் நகல்கள், கல்விச் சான்றிதழ்கள், பாடநெறி சான்றிதழ்கள் மற்றும் பல்வேறு போலிச் சான்றிதழ்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை நுகேகொடை பொலிஸார் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



## கைத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகில் செவ்வாய்க்கிழமை (09) இரவு ஒரு கைத்துப்பாக்கி, ஒரு மகசின் மற்றும் 12 தோட்டாக்களை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

ஒரு இரகசிய தகவலின் அடிப்படையில், விமான நிலைய புறப்பாடு முனையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் நடத்திய சோதனையின் போதே குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரத்மலானைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேக நபர், 2018 டிசெம்பரில் நடந்த துப்பாக்கிச் சூடு தொடர்பாக கல்கிசை பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர் என்பது முதற்கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் பேலியகொட பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.





## ஐஸ் விற்ற மைத்துனர்கள்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

குடும்பத்துடன் நாடு முழுவதும் பயணம் செய்யும் போர்வையில் ஐஸ் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட மைத்துனர்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் பல்வேறு பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 28,400 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருட்கள்யும் கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், புதன்கிழமை (09) அன்று ஹட்டன் மாவட்ட நீதிமன்ற நீதிபதி மற்றும் நீதவான் எம்.பாருக்கின் முன்னிலையில் முன்னிறுத்தப்பட்டபோது, இம்மாதம் (22) வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மாத்தறை-தெலிஜ்ஜவில பகுதியைச் சேர்ந்த பிரசாத் புத்திக (44) மற்றும் காலி அதவல பகுதியைச் சேர்ந்த பிரணதீப் சிறிகுமார (31) ஆகிய சந்தேக நபர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தங்களது மனைவிகள் மற்றும் இரு குழந்தைகளுடன் காரில் பயணம் செய்வதாகக் கூறி, ஈஸி கேஷ் மூலம் பணத்தைப் பெற்று, வழியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் ஐஸ் போதைப்பொருளை வைத்துச் சென்று, வாங்குபவருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். கடந்த புதன்கிழமை(02) அன்று கினிகத்தேன கடவல பகுதியில் சந்தேக நபர்கள் பயணித்த காரை சோதனைக்கு உட்படுத்திய போது பொதி செய்யப்பட்ட ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வட்டவளை, ஹட்டன், கொட்டகலை, தலவாக்கலை, நுவரெலியா, வெலிமட, ஹப்புத்தளை மற்றும் பண்டாரவளை ஆகிய பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில், மீட்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் பொதிகள் மற்றும் சந்தேக நபர்கள் பயணித்த கார் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் விபசாரம்; நால்வர் சிக்கினர்

■ நிதர்ஷன் விணோத்

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விபசாரம் நடைபெறுவதாக சந்தேகிக்கப்பட்ட வீடொன்று புதன்கிழமை(09) அன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டதுடன், நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவற்குழி புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் இயங்கி வந்த விபசார விடுதியொன்றே இவ்வாறு யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த வீட்டின் உரிமையாளரான 68 வயதுடைய நபர் மற்றும் அளவெட்டி, குருநகர், கொடிகாமம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 40, 42 மற்றும் 53 வயதுடைய மூன்று பெண்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளின் பின்னர், கைதான நால்வரையும் சாவகச்சேரி பொலிஸார் ஊடாக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ரூ.45 இலட்சம் கொள்ளை ஐவர் கைது

ஓய்வுபெற்ற கடற்படை சிப்பாய்க்குச் சொந்தமான ஹோட்டலுக்குள் நுழைந்து, தங்களை பொலிஸ் அதிகாரிகள் என்று கூறிக் கொண்டு, அவரிடமிருந்து 45 இலட்சம் ரூபாய் பணத்தைக் கொள்ளையடித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில், பொலிஸ் சார்ஜன்ட்கள் இருவர் மற்றும் ஒரு சிவில் பாதுகாப்புப் படை அதிகாரி உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலன்னறுவை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் இரண்டு சார்ஜென்ட்கள், ஒரு சிவில் பாதுகாப்புப் படை அதிகாரி மற்றும் பொலன்னறுவை பகுதியைச் சேர்ந்த இருவர் ஆவர்.

## ஜனாதிபதியின் விளம்பர பதாகை அகற்றல்

■ வ.சக்தி

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்பு முதல் தடவையாக எதிர்வரும் சனிக்கிழமை(12) அன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இதனை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரது வருகையை அறிவிக்கும் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இவை தேர்தல் விதிமுறைகளுக்கு முரணானது என மாவட்ட தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து பதாகைகள் அகற்றும் பணிகள் மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எம். சுபியான் தலைமையில் புதன்கிழமை(09) இரவு பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டன.

மாவட்ட செயலக தேர்தல் கண்காணிப்புக் குழு உயர் அதிகாரிகளும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.













## பத்திரகாளி அம்பாள் ஆலய இரதோற்சவம்

தெட்சணகைலாசம் என்னும் திருக்கோணமலையில் அருளாட்சி புரியும் அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரமோற்சவத்தின் இரதோற்சவம் வியாழக்கிழமை (10) காலை மணிக்கு இடம் பெற்றது.

- அ.அச்சுதன்





# மரணப் பொறியாகி துர்நாற்றம் வீசும் பொலிஸ் நிலையங்கள்

“குற்றம் மற்றும் வன்முறை குறித்த அச்சமின்றி நம்பிக்கையுடன் வாழக் கூடிய சமாதானம் மிக்க சூழல் ஒன்றை உருவாக்கல்” என்பது இலங்கை பொலிஸின் நோக்கமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், ஒரு சில பொலிஸ் நிலையங்களுக்குச் சென்றால், தங்களுக்கு நியாயம் கிடைக்குமா? என்ற சந்தேகத்தில் பொதுமக்கள் இருக்கின்றனர்.

ஒரு சில அதிகாரிகளில் செயற்பாடுகளால், முழு பொலிஸுக்கும் கரும்புள்ளி வைக்கப்பட்டு விடுகின்றது. எனினும், மிக நேர்மையாக செயற்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, நியாயம் கிடைக்க வேண்டும் என்பதில், பல பொலிஸ் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். இலஞ்சம் வாங்குவோரும் இல்லாமல் இல்லை.

வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட, பசறை மீகஹகிவுல பகுதியைச் சேர்ந்த 26 வயதான நடனக் கலைஞர் நிமேஷ் மரணமடைந்தார். அவருடைய சடலத்தை மீண்டும் தோண்டி எடுத்து மூன்று பேர் கொண்ட மருத்துவக் குழுவைக் கொண்ட சிறப்புக் குழுவால் பிரேதப் பரிசோதனை நடத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, நகைகளைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் அழைத்துச் செல்லப்பட்ட பெண் ஒருவர், வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் வைத்து இதற்கு முன்னர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான சம்பவங்களை வைத்து, பொலிஸ் நிலையங்களுக்கு அருகில், சவப்பெட்டி கடைகள் இருக்கும் வகையில் கேலிச் சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆக, பொலிஸ் நிலையங்களுக்குப் பல கொடுமைகள் இடம்பெறுகின்றன.

1977 வரை, குற்றப் புலனாய்வுத் துறை மக்கள் ‘மாடிகளில்’ இருந்து குதிக்கும் அல்லது விழுந்து இறக்கும் இடமாகவே இருந்தது. அதன் பிறகு, யாரும் ஜன்னலுக்கு வெளியே தள்ளப்பட்டுக் கொல்லப்படவில்லை. மாறாக, சந்தேக நபர்கள் கொல்லப்படாமல் வெறுமனே கொல்லப்படுகிறார்கள்.

சில பொலிஸ் நிலையங்கள், ஒரு வகையான மரணப் பொறியாக உள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, தந்திரமான எதிரிகளிடமிருந்தும் கொலைகாரர்களிடம் இருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நாங்கள் பொலிஸை நோக்கி ஓடினோம். இன்று, குடிமக்களுக்கு பொலிஸாரிடம் இருந்து பாதுகாப்பு கிடைப்பதில்லை. இது மிகவும் அவமானகரமான சூழ்நிலை.

ஒவ்வொரு ஆண்டும் கணிசமான எண்ணிக்கையிலான மக்கள் பொலிஸ் தாக்குதல்களால் இறந்தாலும், அவர்களுக்கான பொறுப்புக்கூறல் இல்லை. இவ்வாறான மக்களுக்காக நீதி கேட்க மிகச் சிலரே முன்வருகிறார்கள். ஏனென்றால் பாதிக்கப்பட்ட தரப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்துபவரை பொலிஸ் துரத்தத் தொடங்குகிறது.

ஆகையால், பொலிஸாரால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எதிராகக் குரல் கொடுப்போர் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது. சில பொலிஸ் நிலையங்களும் சித்திரவதைக் கூடம் போல, துர்நாற்றம் வீசும் இடமாக மாறி வருகிறது என்பதே உண்மையாகும்.

இதேவேளை, கடமையில் இருக்கும் போதே, பொலிஸார், பல்வேறான குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர். போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டிருக்கும் பொலிஸாரில் பலரும் இலஞ்சம் பெறுகின்றனர். குற்றவாளிகளுடன் இணைந்து மது விருந்துபசாரத்தில் ஈடுபட்டிருந்தமையும் அண்மையில் செய்திகளாக வெளிவந்துள்ளன. இவ்வாறான சம்பவங்கள், சட்டம், ஒழுங்கை பேணும் பொலிஸாருக்கு இழுக்கை ஏற்படுத்தும் என்பதை நினைவில் கொள்க.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை – 15

# சுதந்திர இலங்கையின் அபிவிருத்தித் திட்டமிடல்

அபிவிருத்தித் திட்டமிடல் என்பது அடிப்படையில் புதிதாக சுதந்திரம் அடைந்த நாடுகளுக்கு மிகவும் அத்தியாவசியமானது. இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய சுதந்திரமடைந்த நாடுகளில் சோசலிசத்தைத் தழுவிக் கொண்ட நாடுகள் அபிவிருத்தித் திட்டமிடலைச் சோசலிசப் பொருளாதாரங்களுக்கு ஏற்ற ஒரு கருவியாக வெற்றிகரமாகப் பயன்படுத்தின. அனேகமான சந்தர்ப்பங்களில், ஒரு வெற்றிகரமான புரட்சிக்குப் பிறகு, பொருளாதாரத்தின் அனைத்து உற்பத்தி வளங்களும் அரசு உரிமையின் கீழ் வந்தவுடன், சோசலிச நாடுகள் கொடுக்கப்பட்ட வழிமுறைகளுடன் கொடுக்கப்பட்ட இலக்குகளை அடையவும், உற்பத்தியின் பல்வேறு கிளைகளில் சரியான விகிதத்தை வைத்திருக்கவும் திட்டமிடத் தொடங்கின. இத்தகைய பொருளாதாரங்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உற்பத்தியைத் திட்டமிடுகின்றன.

முதலாளித்துவ பொருளாதாரத்தில் சமூக நலன்களோ, மக்கள் நல அரசாசோ சாத்தியமில்லை. ஏனெனில், உற்பத்தி லாபத்தால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. சுமார் 1950 முதல், முதலாளித்துவ பொருளாதாரங்கள் பொருளாதாரத்தில் உள்ள சிக்கல்களைக் கண்டறிந்து, தனியார் பொருளாதார நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக, முதலில் ஒரு புரட்சியை மேற்கொள்ளாமல் திட்டமிடலை ஏற்றுக்கொண்டன. கொலனித்துவ ஆட்சிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த பல புதிய அரசாங்கங்கள் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தப் பொருளாதாரத் திட்டமிடலையும் ஏற்றுக்கொண்டன.

வளரும் நாடுகளின் பிரச்சினைகள் வளர்ந்த நாடுகளிலிருந்து வேறுபட்டவை. ஏனெனில், அவை பெரும்பாலும் விவசாயப் பொருளாதாரங்களைக் கொண்டுள்ளன. அங்கு மக்களின் வாழ்க்கைத் தரம் குறைவாக உள்ளது. முதன்மைப் பொருட்களின் ஏற்றுமதிக்கு வெளிநாட்டுச் சந்தைகளைச் சார்ந்திருத்தல், செல்வம் ஒரு சிலரின் கைகளில் குவிதல், வருமானத்தின் சமத்துவமற்ற விநியோகம், வேலையின்மை, வேலைவாய்ப்பு குறைபாடு, ஊட்டச்சத்துக் குறைபாடு, வீட்டு வசதி இல்லாமை போன்றவை இந்நாடுகளின் முக்கிய பிரச்சினையாகும். குறைந்த வருமானம் குறைந்த உள்நாட்டு சேமிப்பிற்கு வழிவகுக்கும் என்பதால், தனியார் மூலதனம் வளர்ச்சியின்மையை உடைக்க போதுமானதாக இல்லை. எனவே, சரியான அபிவிருத்திக் கொள்கைகளை உருவாக்குவதன் மூலமும் வளர்ச்சியின்மையை சமாளிக்க வேண்டியவர்கள் வளர்ச்சியின்மை குறைவாக உள்ள நாடுகளின் அரசாங்கங்கள்தான். சுதந்திரத்தின் பின்னர், முதலாளித்துவப் பாதையைத் தேர்ந்தெடுத்த நாடுகளின் அரசாங்கங்கள் வரிவிதிப்பு மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் மூலம் பணத்தைத் திரட்டுவதன் ஊடு அபிவிருத்தித் திட்டமிடலைச் செய்ய முனைந்தன.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டமிடலின் பொருத்தம் முன்கூட்டியே உணரப்பட்டது, 1948இல் கவர்னர் ஜெனரல் தெளிவுபடுத்தியது போல்: ‘இந்த நாட்டின் எதிர்கால நல்வாழ்வு அதன் வளங்களின் நல்ல வளர்ச்சியைப் பெருமளவில் சார்ந்துள்ளது என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது, மேலும் இந்த திசையில் முதல் படி திட்டமிடல் ஆகும்.” இலங்கையில், தோட்டத் துறைக்கு வெளியே அதிக திட்டமிடல் இல்லாததும், அதிகரித்து வரும் மக்கள்தொகை அழுத்தமும் திட்டமிடலை ஒரு அவசரத் தேவையாக ஆக்குகின்றன. ஆனால், அரசியல் செயல்முறையின் பலவீனங்கள் இதற்கான வெளிப்படையான தடையாக இருந்தன. இரண்டாம் உலகப் போர்க்காலப் பொருளாதார ஏற்றுமதிகளின் விளைவால் இலங்கைக்கு நல்ல வருமானம் கிடைத்தது. மேலும், ஏற்றுமதி விலைகள் நன்றாக இருந்தன. இது தனியார் நிறுவனங்களையும் குடிசைத் தொழில்களையும் ஊக்குவித்தது. தீவிரமான பொருளாதார திட்டமிடலுக்கான எந்த முயற்சியும் இல்லை.

இலங்கையின் திட்டமிடல் வரலாற்றின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், சுதந்திரத்தையடுத்த 30 ஆண்டுகளில் பல்வேறு அரசாங்கங்களால் உருவாக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் ஏராளமாக உருவாகியிருந்தாலும், ஒரு திட்டம் கூட செயல்படுத்தப்படவில்லை. 1964 முதல் 1968 வரை இலங்கையில் பணியாற்றிய உலக உணவு நிறுவனத்தின் விவசாயப் பொருளாதார வல்லுநர் கலாநிதி பன்சில், தனது *Ceylon Agriculture: A perspective* என்ற தனது நூலில் இந்த முரண்பாட்டை இவ்வாறு எடுத்துரைத்தார்:

“நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு முறையான ஒருங்கிணைந்த திட்டத்தை உருவாக்க, குறிப்பாக செயல்படுத்த, இதுவரை எந்த தீவிர முயற்சியும் எடுக்கப்படவில்லை. 1959இல் தொடங்கப்பட்ட பத்தாண்டுத் திட்டம் கைவிடப்பட்டது, அதன் வாரிசான குறுகிய கால அமலாக்கத் திட்டம் (1962-64) ஒருபோதும் செயல்படுத்தப்படவில்லை. முந்தைய அரசாங்கம் பதவியில் இருந்து நீக்கப்பட்டபோது, அடுத்தடுத்து வந்த ஒரு வருடத் திட்டம் (1964-65) கூட அலமாரியில் தூங்கியது. இதுவரை வெளியிடப்பட்ட அனைத்து திட்டங்களும் ஏதோ ஒரு வகையில், அதிகாரத்தில் உள்ள ஒரு அரசியல் கட்சியுடன் தொடர்புடைய சில தனிப்பட்ட அமைச்சர்களின் ஆர்வத்தின் விளைவாகும், துரதிர்ஷ்டவசமாக, அதிகாரம் அகற்றப்பட்ட பின்னர், உடனடியாக, குறித்த திட்டம் பின்னணிக்குத் தள்ளப்பட்டது.”

நன்கறியப்பட்ட சுவீடன் நாட்டுப் பொருளியலாளரான குன்னர் மிட்ரால் தனது *Asian Drama: An Inquiry into the Poverty of Nations* என்ற தனது நூலில் இவ்வாறு எழுதுகிறார்.

“திட்டமிடல் இருக்க வேண்டும் என்ற கருத்து, நிச்சயமாக, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது, ஆனால் அது முக்கியமாக அரசியல் விளையாட்டில் எதிரிகளை எதிர்கொள்வதற்கே பயன்படுத்தப்பட்டது. பல்வேறு அரசாங்கங்களால் வகுக்கப்பட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் ‘காகிதத் திட்டங்களாக’வே உள்ளன, அவற்றை மீண்டும் கூறுவதில் ஒரே பொருத்தம் என்னவென்றால், இந்த அரசாங்கங்கள் வெவ்வேறு காலங்களில் அவற்றை உணர்ந்த சிந்தனை, முன்னுரிமைகள் மற்றும் பொருளாதார திசைகளைக் காண்பிப்பதாகும். திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் போக்கில் எந்த நேரத்திலும் முன்னேறாத ஒரே வளரும் நாடாக இலங்கை உள்ளது.”

சுதந்திரத்திற்கு முன்பே நாட்டில் ‘காகித திட்டமிடல்’ தொடங்கியது. பல்வேறு அமைச்சுக்களின் முதலீட்டுத் திட்டங்களின் கலவையான 1946ஆம் ஆண்டின் போருக்குப் பிந்தைய அபிவிருத்தித் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டமிடலின் தொடக்கத்தைக் குறிக்கின்றன. இதனை எழுதியவர்கள் இந்த திட்டங்களை ‘தனிப்பட்ட மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஏற்ப பொருத்தப்படக்கூடிய ஒரு அண்ணளவான சுருக்கம்” என்று இதனை விவரித்தனர். ‘வடிவமைக்கப்பட்ட நடவடிக்கை மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, முழு வேலைவாய்ப்பைப் பராமரிப்பது மற்றும் மக்களுக்கு முழுமையான வாழ்க்கையை நடத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குவது என்பன இதன் பிரதான இலக்குகள்’ என்று அவர்கள் சொன்னார்கள். இந்த இலக்குகளை அடைவதற்கான முதன்மை முறை ‘நமது பிரதான உணவை முடிந்தவரை உள்ளூரில் உற்பத்தி செய்வதாகும்”. இவ்வாறு, உலர் மண்டலத்தில் புதிய நிலங்களைத் திறப்பதன் மூலம் விவசாயத்திற்கு உட்பட்ட பரப்பளவை விரிவுபடுத்துவதை இந்த திட்டங்கள் வலியுறுத்தின. விவசாய மற்றும் நில அமைச்சு ரூ.420 மில்லியனை (மொத்தம் ரூ.1,379 மில்லியனில்) ஒதுக்கியது. தொழில் மயமாக்கல் புறக்கணிக்கப்பட்டது.

அடுத்தது 1953ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பொருளாதார திட்டமிடல் செயலகத்தால் தயாரிக்கப்பட்ட ஆறு ஆண்டு முதலீட்டுத் திட்டம் (1954-60). இது அமைச்சரவையின் பொருளாதாரக் குழுவின் மேற்பார்வையில் அமைக்கப்பட்டது. இது உண்மையில் அரசாங்க முதலீடுகளை உள்ளடக்கிய ஒரு பகுதித் திட்டமே தவிர, முழுமையான தேசியத் திட்டம் அல்ல. இதுவும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் நலன்களின் முன்னுரிமைகளை நிலைநிறுத்தியது. விவசாயத் துறையில், முதன்மை நோக்கம் நிலப்பரப்பை விரிவுபடுத்துவதாக இருந்தபோதிலும், ஏற்கெனவே உள்ள விவசாயம் செய்யப்பட்ட பகுதியின் அதிகரித்த உற்பத்தித்திறன் முதன்முறையாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், இந்த அங்கீகாரம் அதற்கு ஒதுக்கப்பட்ட மிகக் குறைந்த நிதியால் மறுக்கப்பட்டது. ஒட்டுமொத்த விவசாயத்திற்கும் ரூ.923 மில்லியன் (மொத்தத்தில் 36%) வழங்கப்பட்டது. தொழில் மயமாக்கல் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை கிட்டத்தட்ட இல்லாதது. ஏனெனில், இந்த ஆறு ஆண்டு முதலீட்டுத் திட்டம், அதன் முன்னோடிகளைப் போலவே, ஒருபோதும் செயல்படுத்தப்படவில்லை.

எனவே, சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆரம்பகால ஐ.தே.க. அரசாங்கங்கள், நாடு பெற்ற ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் பாதிப்பைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டன என்றும், கொலனித்துவப் பொருளாதாரத்தை அதன் அனைத்து ஏற்றத்தாழ்வுகள் மற்றும் தேக்கநிலையுடன் நிலைநிறுத்துவதில் திருப்தி அடைந்தன என்றும் முடிவு செய்வது மிகையாகாது. ஐ.தே.க. அரசாங்கங்கள் இறக்குமதி மாற்று உத்தியின் முதல் கட்டத்தைக் கூட ஏற்றுக்கொள்ளத் தவறிவிட்டன. அவர்களின் ஒரே கவனம் வறண்ட மண்டல கொலனித்துவத்தின் மூலம் விவசாயம் செய்யப்படும் பகுதியை விரிவுபடுத்துவதாகும். இதற்குப் பின்னால் மறைமுகமாக இனத்துவ நலன்களும் இருந்தன. நாட்டின் உயிர்வாழ்வின் நங்கூரமாக இருந்த தோட்ட விவசாயத் துறையை வலுப்படுத்தவும் பன்முகப்படுத்தவும் எந்த கொள்கையும் உருவாக்கப்படவில்லை. தொழில் மயமாக்கல் ஐ.தே.க. அரசாங்கங்களுக்கு ஒரு வெறுப்பூட்டும் செயலாக இருந்தது. உண்மையில், அது வேண்டுமென்றே அவமதிக்கப்பட்டது, மேலும் அறுபதுகள் மற்றும் எழுபதுகளில் வர்த்தக விதிமுறைகள் மோசமடையத் தொடங்கியபோது, அதன் அரசாங்கங்களின் அறியாமை மற்றும் மெத்தனத்திற்கு நாடு மிகப்பெரிய விலையைச் செலுத்த வேண்டியிருந்தது.



## வாழ்வியல் தரிசனம்

போருக்குப் போகும் மாவீரர்கள் போல, எதையும் சிந்திக்காமல், சூடான வார்த்தைகளைத் தமக்குப் பிடிக்காதவர்களிடம் அள்ளி வீசுவதுண்டு.

கோபம் ஒருவரை எல்லை மீறும் உணர்வுக்குள் வசப்படுத்தி விடுகின்றது. சினம் ஏற்படுவது இயல்பானது. அதற்காக தன்னை மறந்து, தகாத வார்த்தைகளைப் பேசும்போது, அதைக் கேட்ட நபரும் அம்பு போல் பாய்கின்றார்.

ஒரு கணம் அமைதியாக சந்தித்தால், சினம் அடங்கி விடும். மனிதனை மனிதன் வெறுத்தல் தகாது. பிடிக்காதவரிடம் பேசாமல் ஒதுங்குவது நல்லது.

நியாயத்தை எவரும் நிராகரிக்கும் போது, இயல்பான கோபம் வருவதுண்டு. இதற்காகக் கெட்டவர்கள் எல்லோரிடமும் மோத முடியாது.

தவறான நடத்தை உள்ளவர்கள், அதன் பிரதிபலனைப் பெற்றே தீருவார்கள். குரோதம் ஒருபோதும் சந்தோசங்களை உணராது; அறிவைக் கெடுக்கும்; பிறரின் தூற்றுதலுக்கு ஆளாவார்கள். வாழும் காலம் பொன்னானது. எனவே, நல்ல வழியில் வாழ்ந்தால், அதுவே நிரந்தர நிம்மதியை அளிக்கும். சினம், நற்குணம் அறியாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கழிவு நீரால் மாணவர்கள் பாதிப்பு



கொத்மலை - பூண்டுலோயா தமிழ் வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவு மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை வளாகத்தில் உள்ள மலசலக்கூட குழியில் இருந்து கழிவு நீர் வெளியேறுவதால் அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் சுகாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாக பெற்றோர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்த குழிக்குள் இருந்து கடந்த ஒரு வருட காலமாக கழிவு நீர் வெளியாகி வருவதாகவும், இந்த விடயத்தைப் பாடசாலை நிர்வாகமோ அல்லது பாடசாலை அபிவிருத்தி சங்கமோ கண்டு கொள்வதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

சுமார் 300இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வரும் குறித்த பாடசாலையில், மாணவர்கள் விளையாடும் போது, கழிவு நீரினை மிதிப்பதால் பல்வேறு நோய்கள் தொற்றுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன், குறித்த பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மலசலக் கூடங்களுக்கு நீர் வசதிகள் இல்லாமையினால், அங்குள்ள மலசலக்கூடங்களை மாணவர்கள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதோடு, துர்நாற்றம் வீசுவதாகவும் குறிப்பிடுகின்றனர் .

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். - எஸ்.சதீஸ்

# யூனியன் வங்கியின் All-in-One தீர்வாக UBGO



தனது செயற்பாடுகளை மேம்படுத்தி மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் யூனியன் வங்கி, தனது டிஜிட்டல் செயற்பாடுகளை மேம்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்கும் வகையில், தனது மொபைல் வங்கியியல் கட்டமைப்பான UBgo இல் பல புதிய உள்ளம்சங்களை உள்ளடக்கி அறிமுகம் செய்துள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு வங்கியியல் அனுபவத்தை எளிமைப்படுத்தி மேம்படுத்தும் வகையிலும், பணப்பரிமாற்றங்கள், சேமிப்பு மற்றும் நிலையான வைப்பு கணக்குகளை உடனுக்குடன் ஆரம்பித்தல், வேகமான QR கொடுப்பனவுகள், நிர்வகிப்பு மற்றும் கட்டணப்பட்டியல் கொடுப்பனவுகள், கார்ட்கள் மற்றும் பல வங்கிசார் அம்சங்களை சுலபமாக மேற்கொள்ளக்கூடிய வகையில் UBgo வடிவமைக்கப்பட்டுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மெருகேற்றங்களினூடாக தற்போது app இல் வீடியோ KYC வசதி வழங்கப்பட்டு, கிளைக்கு விஜயம் செய்யாமல், கணக்கை ஆரம்பித்துக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வங்கியுடன் சுலபமாக தொடர்புகளை பேணக்கூடிய வகையில் இந்த app இனூடாக Call-Back கோரிக்கைகளை மேற்கொள்ளும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் வங்கியியல் பிரிவின் உப தலைவர் மனீஷ பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், “டிஜிட்டல் புத்தாக்கங்கள் மற்றும் சேவைச் சிறப்பு ஆகியவற்றினூடாக எமது வாடிக்கையாளர்களின் வாழ்வை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை வங்கி தொடர்ந்து மேற்கொண்ட வண்ணமுள்ளது. அதற்கமைய சிறந்த டிஜிட்டல் வங்கியியல் அனுபவத்தை வழங்குவது எமது முன்னுரிமை. UBgo மொபைல் வங்கிச்சேவை app இல் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மெருகேற்றங்களினூடாக, எதிர்பார்க்கப்படும் இளம் வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு வெற்றிகரமாக சென்றடைய வங்கிக்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், எமது ஏற்கனவே காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வங்கியியல் அனுபவத்தையும், பெறுமதி சேர்ப்பையும் வழங்கவும் முடியும். ISO 27001:2022 சான்றிதழினால் கௌரவிக்கப்பட்ட முதலாவது வங்கியாக யூனியன் வங்கி திகழ்வதுடன், தரவு பாதுகாப்பில் உயர் நியமங்களை பேணுகின்றமைக்காக Payment Card Industry Data Security Standard (PCI DSS) v4.0 ஐயும் கொண்டுள்ளது. app இனால் பாதுகாப்பான biometric உறுதிப்படுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள் வழங்கப்படுவதால், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான வங்கியியல் அனுபவத்தைக் கொண்டிருக்க முடியும். மாற்றமடைந்து வரும் நுகர்வோரின் தேவைகள் மற்றும் சந்தை போக்குகளுக்கமைய எதிர்காலத்துக்கு தயாரான டிஜிட்டல் தீர்வாக இந்த app தொடர்ந்தும் மெருகேற்றப்படும்” என்றார்.




## மக்களின் தனியார் வங்கி

# வர்த்தக நாமமாக கொமர்ஷல் வங்கி

SLIM Kantar மக்கள் விருதுகள் 2025 நிகழ்வில், தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஆண்டுக்கான ‘மக்களின் தனியார் வங்கி சேவைகள் வர்த்தக நாமமாக கொமர்ஷல் வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது நாட்டின் மிகவும் பிரபலமான தனியார் துறை வங்கி என்ற வங்கியின் நிலையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இந்த விருதுகள் நிகழ்வு, முன்னணி உலகளாவிய நுண்ணறிவு நிறுவனமான Kantar இன் ஆய்வின் அடிப்படையில் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தால் (SLIM) நடத்தப்படுவதுடன் இவ்விருதுகள் இலங்கையில் நுகர்வோர் சார்ந்த அங்கீகாரத்திற்கான இறுதி சான்றாகக் கருதப்படுகின்றன. இவை நிபுணர்கள் குழுவால் அல்லாமல், நுகர்வோர் வாக்குகளால் மட்டுமே தீர்மானிக்கப்படுவதுடன், மேலும் இலங்கையர்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வென்ற வர்த்தக நாமங்கள் மற்றும் ஆளுமைகளை அங்கீகரிக்கின்றன.

இந்த விருதானது மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கையில் வங்கியின் சேவைகள் தொடர்ந்து ஏற்படுத்தும் சிறப்பான மாற்றங்களுக்கும், வங்கியின் வர்த்தக நாம கட்டமைப்பு முயற்சிகள் மற்றும் சந்தைப்படுத்தல் முயற்சிகளின் செயல்திறனுக்கும் ஒரு சான்றாகும் என்று வங்கி தெரிவித்துள்ளது. வாடிக்கையாளர்களுடனான வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாடு, புதுமையான பிரசாரங்கள் மற்றும் சிறந்த வங்கி அனுபவங்களை வழங்குவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவை இந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

இலங்கையின் மிகப்பாரிய தனியார் துறை வங்கியும், நாட்டில் அதிக விருதுகளைப் பெற்ற நிதி நிறுவனமுமான கொமர்ஷல் வங்கி, நான்கு மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக சேவைகளை வழங்கி வருவதுடன் மேலும், இலங்கையில் மிகப்பாரிய தனியார் துறை கடன் வழங்குநராகவும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் (SME) துறைக்கு மிகப்பாரிய கடன் வழங்குநராகவும் திகழ்கிறது.

கொமர்ஷல் வங்கியானது தனது வர்த்தக நாமத்தை வளர்ப்பதிலும், மூலோபாய ரீதியாக உருவாக்கப்பட்ட கருப்பொருள் தொடர்புகள் மூலம் வர்த்தகநாம பங்கினை வளர்ப்பதிலும், பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களிலும், புரட்சிகரமான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரசாரங்கள் மூலமாகவும் நிகழ்வு நிகழ்வுகளுக்கான அனுசரணைகளை வழங்குதலிலும் சிறப்பு கவனம் செலுத்துகிறது. பன்மொழி விளம்பரங்கள் மூலம் அனைத்து தகவல் தொடர்புகளிலும் உள்ளடக்கியதாக இருப்பதை வங்கி உறுதிசெய்வதுடன் மேலும் அனைத்து தரப்பு வாடிக்கையாளர்களையும் அணுகுகிறது. அதன் பெரு நிறுவன வலைத்தளமானது மற்றும் இன்ஸ்டாகிராம் பின்தொடர்பவர்களின் அடிப்படையில் தொழில்துறையை வழிநடத்துவதுடன் மேலும் யூடியூப், பேஸ்புக் மற்றும் எக்ஸ் ஆகிய சமூக ஊடகத்தளங்களில் முன்னணி நிலையை வகிக்கிறது.

கொமர்ஷல் வங்கியானது LMD இன் வருடாந்த மிகவும் மதிக்கப்படும் நிறுவனங்கள்’ பட்டியலில் தொடர்ந்து 20 ஆண்டுகளாக மிகவும் மதிக்கப்படும் வங்கியாக’ தரவரிசைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## பாளைச் சிரிப்பழகி..!



நான் நட்ட  பாக்கு மரம்
பூத்துச் சிரிக்குது
நன்றி சொல்லி
காற்றிலாடி
என்னை அழைக்குது
வெட்டிச்சப்ப காத்தி
ருந்தபழப்
பாக்கை எடுத்து
விருப்புடனே நிலத்தில்
நட்டு
நீரும் ஊற்றினேன்
பார்த்திருக்க பத்து நாளில்
அதுவும் முளைத்தது
பச்சை இளம்பிள்ளை போல
மெல்லச் சிரித்தது.
நாட்கள் மெல்ல நகர்ந்துசில
வருட மானது
நல்ல வளர்ச்சி கண்டுஇப்போ
மரமும் ஆனது..!
அழகான பாளை விரித்து
பெண்ணாய்  சிரிக்கிறாள்
அன்று தன்னை நட்ட என்னை
அருகே அழைக்கிறாள்.
தந்தையைப்போல் எனைய
ணைத்து
நன்றி சொல்கிறாள்..!
மகிழ்ச்சியிலே எனது உள்ளம்
துள்ளிக் குதித்ததால்
அவளழகை படமும் எடுத்து
இங்கு
காட்சிப் படுத்தினேன்..!

-ஷெல்லிதாசன்-





## உரிமை



மூக்கணாம் கயிற்றை
பிய்த்து எறியும் ஆக்ரோசங்களில்
கேட்டிக்கம்பின் தடத்தசைகள்
பயந்து வீக்கம் கொள்கிறது.

இழுவை கறவை
அறுவை மாடுகளாக்கப்பட்ட
வாழ்தலில்
பாவத்தின் பெயரால்
கயிறுகள் மட்டுமே
மாற்றமாகின

குனிந்து கும்பிடு
போடுதல்
வளர்ச்சியடைந்த
தருணங்களில்
உரிமை மீட்டதாக
வெடி கொழுத்தி
கொண்டாடிய பழக்கம்

வழக்கமானதாக நகர்ந்திட
கூடமைத்து வாழ
சுள்ளிகளும்
தும்புகளும்
தேடியலைகிறன
காலத்துப் பறவைகளும்
எங்களுடன்..!

- காரையன் கதன்-



## வேண்டும்... வேண்டும்...



வேறென்ன பெரு வாழ்வு
வாழ்ந்து விடப் போகிறேன்.
அந்தியில் சற்றுநேரம்
வானம் பார்க்காமல்,
இரவில் ஜன்னல் வழி
நட்சத்திரம் இரசிக்காமல்,

பயணமொன்றின் போது பிடித்த
பாடலினைக் கேட்காமல்,
பிடித்தவர்களோடு தேநீர்
இடைவெளியை பகிர்ந்து
கொள்ளாமல்,
என் இரகசிய கணங்களை
ஓர் நாட்குறிப்பில்
பத்திரப் படுத்தி வைக்காமல்,

என்னைப்பற்றிய
சங்கதிகளையெல்லாம்
ஒருவரிடம் கூட
பகிர்ந்து கொள்ளாமல்,

என் கரம் பற்றி
கதை பேசுபவர்களுக்கு
கடைசி நம்பிக்கை
தந்து விடாமல்,
வேறென்ன பெருவாழ்வு
வாழ்ந்து விடப் போகிறேன்..!

- சோபி -

# புத்தாண்டு வாழ்த்துச் செய்திகள்



## “புத்தாண்டு நமது வாழ்விற்கு புதிய ஆரம்பத்தை தரும்”



பௌதீக மற்றும் ஆன்மீக ரீதியாக புதிதாகும் எதிர்பார்ப்புகளை அடையாளப்படுத்தும், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை, நாடு என்ற வகையில் பல வெற்றிகளை அடைந்துகொண்டு, சிறந்த மற்றும் புதியதொரு தேசத்தை உருவாக்கும் கனவிற்காக இடைவிடாமல் போராடும் வேளையில் நாம் கொண்டாடுகிறோம் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, 2025ஆம் ஆண்டு தமிழ்-சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், வீழ்ச்சியடைந்திருந்த நமது நாட்டை கடந்த சில மாதங்களாக மீண்டும் கட்டியெழுப்பி, பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக புதிய நிலைக்கு உயர்த்தி வைத்துள்ளோம். அந்த வெற்றிகள் அனைத்தும் இந்நாட்டு மக்களுக்கே உரித்தாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையே நாட்டில் மாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுத்தது என்பதையும் வலியுறுத்த வேண்டும்.

சவால்களுக்கு மத்தியில் சரிந்து விடாமல் நாட்டிற்காக நமது பொறுப்பை மேலும் வலுவாக நிறைவேற்றும் துணிச்சல் எமக்கு உள்ளது. மேலும் பூகோள அரசியலை போன்றே தேசிய ரீதியாக நாட்டின் முன்பிருக்கும் அனைத்து விதமான சவால்களையும் எதிர்கொள்ளத் தேவையான திட்டங்களை அரசாங்கம் தற்போது செயல்படுத்தி வருகிறது.

மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான பௌதீக மற்றும் ஆன்மீகத் தொடர்புகளின் தனித்துவம் புத்தாண்டு மரபுகளினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவை சிங்கள மற்றும் தமிழ் இனங்களுக்கு இடையில் காணப்பட்ட வரலாற்று பிணைப்பு மற்றும் சகவாழ்வின் உயிர்ப்புள்ள சான்றாக விளங்குகின்றன.

இன்றைய சமூகம் பல்வேறு பிரிவுகளால் வேறுபட்டிருந்தாலும், புத்தாண்டு போன்ற கொண்டாட்டங்கள் அத்தகைய பிரிவுகளைக் கலைந்து சமூகத்திற்குள் மீண்டும் ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வைப் பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன.

சகவாழ்வை ஊக்குவித்து மற்றவர்கள் மீது கருணை காட்டும் ஒழுக்கத்தின் இருப்பை எமக்குள் ஏற்படுத்திக்கொள்வதே இந்தப் புத்தாண்டில் நமது பொறுப்பாகும்.

மேலும், மக்கள் வாழ்வைப் புதுப்பித்துக்கொள்ளவும் பிற்போக்கான மனப்பாங்கு மற்றும் சிந்தனை அற்ற புதிய மனிதனை உருவாக்குவதுமே சூரிய பெயர்ச்சியுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் அனைத்து சம்பிரதாயங்களினதும் பொதுவான எதிர்பார்ப்பாகும். இவ்வாறு நாம் புதிதாவதால் மாத்திரமே புத்தாண்டு நமது வாழ்விற்கு புதிய ஆரம்பத்தைத் தரும்.

நாட்டிற்குத் தேவையான புதிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தேசிய திட்டத்தை வெற்றிபெறச் செய்யவும் நாட்டையும் மக்களையும் வெற்றிபெறச் செய்வதற்காகவும் இந்த புத்தாண்டில் அனைவரும் மேலும் வலிமையுடனும் ஒற்றுமையுடனும் ஒரே நோக்கத்திற்காக ஒன்றுபடுவோம் என அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் “வளமான நாடு - அழகான வாழ்க்கை” நோக்கிய பயணத்தின் எதிர்பார்ப்புக்களை ஒளிரச் செய்யும் செழிப்பான புத்தாண்டாக அமையட்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## “ஐக்கியமும் புத்தெழுச்சியும் கிடைக்க பிரார்த்தனைகள்”



“வளமான நாடு, அழகான வாழ்க்கைக்காக நாம் ஒன்றிணைந்து செயற்பட்டுவரும் இவ்வேளையில், மலரும் புத்தாண்டை புதிய எதிர்பார்ப்புடனும், புதிய தொலைநோக்குடனும் வரவேற்போம் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தனது 2025 ஆம் ஆண்டுக்கான தமிழ்-சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், ஒற்றுமை மற்றும் தாராள சிந்தையுடன் புத்தாண்டைக் கொண்டாடும் இலங்கைத் தாய்நாட்டின் சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது வாழ்வின் அனைத்து அம்சங்களையும் புதுப்பிக்க வேண்டிய தேவையுள்ள நேரத்தில் இப் புத்தாண்டு மலர்கிறது. எமது கலாசாரம் மற்றும் பெறுமானங்களில் வேரூன்றியிருக்கும், நேர்மறையான மாற்றத்தை அடைந்துகொள்வதற்கு, இலக்குகளின் அடிப்படையில் நாம் ஒற்றுமையுடன் முன்னேற வேண்டும் என்பதை இந்த பாரம்பரிய பண்டிகை எமக்கு நினைவூட்டுகிறது.

அண்மைய வரலாற்றில், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பலருக்குப் புத்தாண்டு கொண்டாட்டம் பற்றி நினைத்தும் பார்க்க முடியாதளவு கடினமாக இருந்ததை நாம் அறிவோம். இருப்பினும், ஊழல் மற்றும் மோசடி சக்கரத்தில் இருந்து விடுபடுவதற்கு மக்களின் துணிச்சலான முயற்சிகள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழி வகுத்துள்ளன.

அதனால்தான் 2025 புத்தாண்டு கொண்டாட்டம் ஒரு முக்கிய மைற்கல்லைக் குறித்து நிற்கிறது. இது வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு என அனைத்து சமூகங்களும் சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்குவதற்காக ஜனநாயகக் கொள்கைகளின் கீழ் ஒன்றிணைந்துள்ள ஆண்டாகும். எதிர்வரும் மே மாதத்தில் அந்த மக்களின் எதிர்பார்ப்புகள் மீண்டும் கைகூடும் என்பதில் சந்தேகமில்லை.

புலர்ந்திருக்கும் புத்தாண்டில் புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பிக்கும் இத்தருணத்தில், அனைத்து பிரஜைகளும் தங்கள் சமூகங்களில் கௌரவம், அமைதி மற்றும் பரிவுணர்வுடன் செயற்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எதிர்வரும் ஆண்டில் வெற்றி மற்றும் முன்னேற்றத்தை அடைய அர்ப்பணிப்பு, நம்பிக்கை மற்றும் மீளாற்றலுடன் செயற்பட நாம் அனைவரும் உறுதி பூணுவோம்.

மலரும் இந்த சிங்கள தமிழ் புத்தாண்டில் இலங்கை தேசத்திற்கு புதியதோர் மாற்றமும் வளமான எதிர்காலமும் அமையப் புத்தாண்டைக் கொண்டாடும் அனைத்து இலங்கையர்களுக்கும் வலிமையும் ஐக்கியமும் புத்தெழுச்சியும் கிடைக்க எனது பிரார்த்தனைகள் என்றும் தெரிவித்துள்ளார்.

## “மகிழ்ச்சியும் செல்வமும் நிறைந்த புத்தாண்டுக்காக ஒன்றிணைவோம்”



இலங்கையர்களின் சிறப்பான கலாசார விழாவான சிங்கள தமிழ் புத்தாண்டுக்காக எமது நாட்டின் அன்பான மக்களுக்கு வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். சூரியன் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்குள் செல்லுவதைப் பாரம்பரியமாகப் புத்தாண்டின் பிறப்பு அல்லது சூரிய பகவானைக் கொண்டாடுவதற்கு இந்நாட்டு மக்கள் தொன்றுதொட்டு செயல்பட்டு வருகின்றனர். இக்காலத்தில் மரங்கள் கனிகளால் நிறைந்து, விளைச்சல் செழித்து, களஞ்சியங்கள் நிரம்பி, அனைவரின் உள்ளங்களிலும் செழிப்பின் ஒளி பிறக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 2025ஆம் ஆண்டு தமிழ்-சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், சிங்கள தமிழ் புத்தாண்டு என்பது சரியான நேரத்தில் துல்லியமாக செயல்படுவதைப் பழக்கப்படுத்திய, நன்றி உணர்வை வளர்த்தெடுத்த கலாசார விழாவாகும். மேலும், இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையேயான உறுதியான தொடர்பையும், ஒருவருக்கொருவர் இடையேயான உறவுகளின் மதிப்பையும் வெளிப்படுத்தும் இவ்விழா, அனைத்து வேறுபாடுகளையும் மறந்து புதிய மனிதர்களாக முன்னேறுவதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது.

இந்த புத்தாண்டில் வழக்கமான சவால்களுடன் புதிய சவால்களும் நம் முன் உள்ளன. அவற்றை சரியாக நிர்வகித்து நாட்டையும் மக்களையும் முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்வது நம் அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும். அத்தகைய சூழ்நிலைகளில் குறுகிய கருத்தியல்களில் ஒட்டிக்கொண்டிருப்பது தவிர்க்கப்பட வேண்டும் என நாங்கள் நம்புகிறோம். எனவே, இதன் உண்மையான பொருளைப் புரிந்துகொண்டு, கூட்டு முயற்சியின் மூலம் நமக்கு எதிரான சவால்களை வென்று அமைதி, மகிழ்ச்சி, செழிப்பு நிறைந்த புத்தாண்டிற்கு நாம் அனைவரும் செயல்பட வேண்டும். ஒரு நாடாக நாம் எதிர்கொள்ளும் சவால்களை அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிகரமாக எதிர்கொண்டு, அந்த சவால்களை வென்று அனைவரையும் உள்ளடக்கிய செழிப்பை நோக்கிய இந்த பயணத்தில், அனைவரின் உள்ளங்களிலும் துக்கம், கண்ணீர், வலி இல்லாமல் மகிழ்ச்சியும் செல்வமும் நிறைந்த புத்தாண்டிற்காக ஒன்றிணையுமாறு உலகெங்கிலும் உள்ள இலங்கையர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி, செழிப்பு நிறைந்த இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் என்றார்.

## “சுபீட்சமும் நிறைந்த ஆண்டாக அமையட்டும்”



இலங்கையர்களின் தொன்மைமிகு பாரம்பரியமான தமிழ்-சிங்கள சித்திரை புத்தாண்டு பிறப்பினை முன்னிட்டு வாழ்த்துகளை பகிர்ந்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இ.தொ.கா பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமான் தனது புதுவருட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நமது வாழ்வில் பொருமையும், நம்பிக்கையும் அவசியமான பொழுதொன்றில் மலரும் தமிழ்-சிங்கள சித்திரை புத்தாண்டானது, அனைவரினது இடர்களையும் துயர்களையும் போக்குகின்ற ஓர் புதிய ஆண்டாக அமைய வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

மேலும், தமிழ்-சிங்கள புத்தாண்டானது நம் அனைவரினதும் மாபெரும் கலாசார பெருவிழாவாகும்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றுச் சமூக, கலாசார மதிப்புகளை ஒரு தலைமுறையிலிருந்து மற்றுமொரு தலைமுறைக்கு கடத்தும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் புதிதாக பிறக்கும் புத்தாண்டில் நம் நல்லெண்ணங்களை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த 2025 விசுவாவசு புத்தாண்டு பிறப்பானது உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் வாழ்வில் மிகுந்த மகிழ்ச்சியும், அமைதியும், சுபிட்சமும் நிறைந்த சிறப்பான ஆண்டாக அமையப் பிரார்த்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



வரி விவகாரம்: ட்ரம்ப்பின்

# திடீர் முடிவு

சீனா/ அமெரிக்கா



சீனாவை தவிர மற்ற நாடுகள் மீது விதிக்கப்பட்ட கூடுதல் வரியை 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக, ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அதன்படி, கடந்த 2ஆம் திகதி எந்தெந்த நாடுகளுக்கு எத்தனை சதவீதம் வரி என்று ட்ரம்ப் அறிவித்தார். இந்த வரிவிதிப்பு 9ஆம் திகதி, அமுலுக்கு வரும் என்று அறிவித்தார்.

இந்திய பொருட்களுக்கு 26 சதவீத வரி விதித்தார். சீன பொருட்களுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட 20 சதவீத வரியுடன் கூடுதலாக 34 சதவீத வரி விதித்தார். அதற்கு சீனா பதிலடியாக, அமெரிக்கப் பொருட்களுக்கு 34 சதவீத வரி விதித்தது. அந்த வரியை 8ஆம் திகதிக்குள் இரத்து செய்யாவிட்டால், சீன பொருட்கள் மீது மேலும் 50 சதவீத வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் மிரட்டல் விடுத்தார். ஆனால், சீனா இரத்து செய்யவில்லை. இதனால் சீன பொருட்கள் மீது கூடுதலாக 50 சதவீத வரி விதிக்கப்பட்டது.

அத்துடன், சீன பொருட்கள் மீதான மொத்த வரி 104 சதவீதமாக உயர்ந்தது.


அமெரிக்காவுக்குப் பதிலடியாக, அமெரிக்கப் பொருட்கள் மீது சீனா மேலும் 50 சதவீத வரி விதித்தது. இதனால், அமெரிக்கப் பொருட்கள் மீதான சீனாவின் வரிவிதிப்பு 84 சதவீதமாக உயர்ந்தது. இது, வியாழக்கிழமை(10) அமுலுக்கு வந்தது.

அமெரிக்காவின் வரி விதிப்பு காரணமாக சர்வதேச அளவில் பொருளாதார நிலையற்ற தன்மை ஏற்படும் என்ற அச்சம் எழுந்த நிலையில், 90 நாட்களுக்குத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாகவும் சீனாவுக்கு மட்டும் விதி விலக்கு கிடையாது எனவும் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

விஜய் மல்லையாவுக்கு எதிரான வழக்கில்

# இந்திய வங்கிகளுக்கு சாதகமான தீர்ப்பு

இந்தியா/ பிரித்தானியா



வங்கிக்கடன் மோசடி விவகாரத்தில் விஜய் மல்லையா திவால் ஆனவர் என்ற உத்தரவை லண்டன் உயர்நீதிமன்றம் உறுதிசெய்தது.

இந்தியாவில் உள்ள 17க்கும் மேற்பட்ட வங்கிகளில், கிட்டத்தட்ட ரூ.9000 கோடிக்கு மேலாகத் தொழிலதிபரான விஜய் மல்லையா கடன் வாங்கியிருந்தார்.

கடனைத் திருப்பித் தராமல் இவர், கடந்த 2016ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குத் தப்பிச் சென்றார். தற்போது லண்டனில் வசித்துவரும் அவரை, நாடு கடத்தும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது.

விஜய் மல்லையா, கிங்பிஷர் எயார்லைன்சஸுக்கு அளித்த உத்தரவாதம் தொடர்பாக கடன் மீட்பு தீர்ப்பாயம் உத்தரவிட்டு இருந்தது. கடந்த 2017ஆம் ஆண்டு, அந்த தீர்ப்பை லண்டன் திவால் மற்றும் கம்பெனி நீதிமன்றத்தில் இந்திய வங்கிகள் தாக்கல் செய்தன.

அத்துடன், 2018ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், விஜய் மல்லையாவுக்கு எதிராக வங்கிகள் திவால் மனுத் தாக்கல் செய்தன. அதன்பேரில், கடந்த 2021ஆம் ஆண்டு ஜூலை மாதம், மல்லையா திவாலானவராக அறிவிக்கப்பட்டது. அதை எதிர்த்து லண்டன் உயர்நீதிமன்றத்தில் விஜய் மல்லையா மேல்முறையீடு செய்தார்.

இந்நிலையில், லண்டன் உயர்நீதிமன்றம், புதன்கிழமை(9), இந்திய வங்கிகளுக்கு ஆதரவாகத் தீர்ப்பு அளித்தது.

விஜய் மல்லையா திவால் ஆனவர் என்ற உத்தரவை நீதிமன்றம் உறுதி செய்தது. மேல்முறையீடு செய்ய அனுமதி கோரிய மல்லையாவின் 2 மனுக்களையும் நீதிமன்றம் நிராகரித்தது.



அயோத்தி கோயிலில்

# ‘ராம் தர்பார்’ மே 23இல் திறப்பு

அயோத்தி

அயோத்தி இராமர் கோயிலில், மே 23இல் ‘ராம் தர்பார்’ திறக்கப்படுகிறது.

இதனை ஜூன் 6 முதல் பொதுமக்கள் தரிசிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஸ்ரீராமஜென்மபூமி அறக்கட்டளையின் தலைவர் நிருபேந்தர் மிஸ்ரா கூறும்போது, “இந்த மாத இறுதியில் ராம் தர்பாரில் ஸ்ரீராமர், சீதா, பரதன், லஷ்மணன், அனுமன் ஆகியோரின் சிலைகள் அமைக்கப்படுகின்றன.

“இவை உள்பட கோயிலின் அனைத்து சிலைகளும் ராஜஸ்தானின் மக்ரானா சலவை கற்களால் ஜெய்ப்பூரில் செய்யப்பட்டு இம்மாத கடைசியில் வந்துசேர உள்ளன. ஆனால், பாலராமர் சிலைக்கான விழா போன்று எதுவும் ராம் தர்பாருக்கு நடத்தப்போவதில்லை” என்றார்.

அத்துடன், கோயில் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டு, இறுதியில் வளாக சுற்றுச்சுவர் எழுப்பப்பட உள்ளது. இராமர் கோயில் வளாகத்தில் சூர்யதேவ், பாக்வதி, அன்னபூர்ணா, சிவன், விநாயகர், அனுமன் ஆகிய கடவுள்களுக்கும் கோயில்கள் அமைகின்றன.

மேலும் சப்தரிஷிகளான வால்மீகி, வசிஷ்டர், விஸ்வாமித்ரர், அகஸ்திய முனி, சிஷாத்ராஜ், சபரி, அகல்யா ஆகியோருக்கும் ஏழு கோயில்கள் இடம் பெறுகின்றன. இவை அனைத்தும் ஜூன் 6இல் பொதுமக்கள் தரிசனத்திற்கு திறக்கப்படவுள்ளன.



சம்பியன்ஸ் லீக்:

# வீழ்த்தியது பார்சிலோனா

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் வியாழக்கிழமை(10) அதிகாலை நடைபெற்ற ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா வென்றது. பார்சிலோனா சார்பாக றொபேர்ட் லெவன்டோஸ்கி இரண்டு கோல்களையும், றபீனியா, லமீன் யமால் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில்

# ஐந்தாம் இடத்துக்கு முன்னேறிய பிறேஸ்வெல்



சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஐந்தாமிடத்துக்கு நியூசிலாந்தின் மிஷெல் பிறேஸ்வெல் முன்னேறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கெதிரான மூன்றாவது போட்டியில் 59 ஓட்டங்களைப் பெற்றதோடு, ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய நிலையிலேயே ஏழாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தை பிறேஸ்வெல் அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய், 2.மொஹமட் நபி,
3.சிகண்டர் ராசா, 4.மெஹிடி ஹஸன் மிராஸ்,
5.மிஷெல் பிறேஸ்வெல்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.மகேஷ் தீக்ஷன, 2.குல்தீப் யாதவ், 3.கேஷவ் மஹராஜ்,
4.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ், 5.ரஷீட் கான்,
6.மிற்செல் சான்ட்னெர், 7.குடகேஷ் மோட்டி,
8.மற் ஹென்றி, 9.இரவீந்திர ஜடேஜா, 10. அடம் ஸாம்பா.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஷுப்மன் கில், 2.பாபர் அஸாம், 3.றோஹித் ஷர்மா,
4.ஹெய்ன்றிச் கிளாசென், 5.விராட் கோலி,
6.டரைல் மிற்செல், 7.ஹரி டெக்டர், 8.ஷ்ரேயாஸ் ஐயர்,
9.சரித் அசலங்க, 10.இப்ராஹிம் ஸட்ரான்.



மொன்டி– கார்லோ மாஸ்டர்ஸ்:

# இரண்டாவது சுற்றுடன் வெளியேற்றப்பட்டார் ஜோக்கோவிச்

மொன்டி-கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றுடன் உலகின் ஐந்தாம் நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச் வெளியேற்றப்பட்டார்.

பிரான்ஸில் நடைபெற்று வருகின்ற இத்தொடரின் முதலாவது சுற்றில் இடையைப் பெற்ற சேர்பியாவின் ஜோக்கோவிச், புதன்கிழமை (09) நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 3-6, 4-6 என்ற நேர் செட்களில் சிலியின் அலெஜான்ட்ரோ தபிலோவிடம் தோற்று தொடரிலிருந்து வெளியேறினார்.

ஐ.பி.எல்:

# ராஜஸ்தானை வீழ்த்திய குஜராத்



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), அஹமதாபாத்தில் புதன்கிழமை (09) நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ராஜஸ்தான்

குஜராத்: 217/6 (20 ஓவ. )
(துடுப்பாட்டம்: சாய் சுதர்ஷன் 82 (53), ஷாருக் கான் 36 (20), ஜொஸ் பட்லர் 36 (25), ராகுல் டெவாட்டியா ஆ.இ 24 (12), ரஷீட் கான் 12 (04) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: ஜொஃப்ரார் ஆர்ச்சர் 1/30 [4], பஸல்ஹக் பரூக்கி 0/38 [4], சந்தீப் ஷர்மா 1/41 [4])

ராஜஸ்தான்: 159/10 (19.2 ஓவ.)
(துடுப்பாட்டம்: ஷிம்றோன் ஹெட்மயர் 52 (32), சஞ்சு சாம்சன் 41 (28), ரியான் பராக் 26 (14) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: பிரசீத் கிருஷ்ணா 3/24 [4], சாய் கிஷோர் 2/20 [2.2], ரஷீட் கான் 2/37 [4], மொஹமட் சிராஜ் 1/30 [4], அர்ஷாட் கான் 1/19 [2], குல்வந்த் கெஜ்றோலியா 1/29 [3])

போட்டியின் நாயகன்: சாய் சுதர்ஷன்.

இந்நிலையில், சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நடப்புச் சம்பியன்களான கொல்கத்தா நைட் றைடர்ஸை சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்கிறது.



முன்னாள் எம்.பி. ஹரீஸின் நிதி ஒதுக்கீட்டில்

# நாவிதன்வெளி அமீரலி மைதானத்தில் பார்வையாளர் அரங்கு நிர்மாணிப்பு

நூருல் ஹுதா உமர்

பிராந்திய விளையாட்டுத்துறையை மேம்படுத்த முன்னாள் விளையாட்டுத்துறை பிரதியமைச்சரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸ் பல்வேறு வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக திகாமடுல்ல மாவட்டம் முழுவதும் முன்னெடுத்து வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக நாவிதன்வெளி மக்களின் நீண்ட நாள் தேவையாக இருந்த அமீரலி விளையாட்டு மைதான அபிவிருத்தி பணிகளுக்காக கடந்த காலங்களில் நிறைய நிதி ஒதுக்கீடுகளை செய்திருந்தார். அதனையொட்டியதாக அப்பிரதேச மக்களின் நீண்ட நாள் தேவையாக இருந்த ஒழுங்கான பார்ப்போர் அரங்கு இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் முகமாக எச்.எம்.எம் ஹரீஸின் ட- 100 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐந்து மில்லியன் ரூபாய் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வரும் பிரம்மாண்ட பார்ப்போர் அரங்கின் நிர்மாணப் பணிகளை கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேரில் சென்று பார்வையிட்டார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 11, ஏப்ரல் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.